**பாடம் - 3** | **الدرس الثالث**

**மல ஜலம் கழித்தல்** | **قضاء الحاجة**

**மல ஜலம் கழிப்பதன் ஒழுங்கு முறைகள்:**

**1.**கழிப்பறையில் நுழையும்போது

بِسْمِ اللهِ اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْخُبْثِ وَالْخَبَائِثِ

‘பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மினல் குப்ஸி வல்கபாயிஸ்’ என்று கூறி இடது காலை முன்வைத்து நுழைய வேண்டும். (பொருள்: இறைவா! ஆண், பெண் ஷைத்தான்களை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன்.)

வெளியே வரும்போது வலது காலை முன்வைத்து غُفْرَانَكَ ‘ஃகுஃப்ரானக’ என்று கூறி வெளியே வர வேண்டும். (பொருள்: இறைவா! உன்னிடம் நான் பாவமன்னிப்புக் கோருகிறேன்.)

**2.**அல்லாஹ்வின் திருநாமம் உள்ளவற்றை உடன் எடுத்துச் செல்லக்கூடாது. அது காணாமல் போய்விடும் என்ற அச்சம் இருந்தாலே தவிர!

**3.**திறந்த வெளியில் மலஜலம் கழிக்கும்போது கிப்லாவை முன்னோக்கவோ பின்னோக்கவோ கூடாது. கட்டிடத்திற்குள் என்றால் கிப்லாவை முன்னோக் குவதும் பின்னோக்குவதும் கூடும்.

**4.**மக்களைவிட்டும் மானத்தை மறைத்துக் கொள்ள வேண்டும். இதில் அலட்சியம் காட்டக்கூடாது. பொதுவாக ஆண் மறைக்க வேண்டிய பகுதி தொப்புளிலிருந்து முட்டுக்கால் வரையாகும். பெண் உடல் முழுவதும் மறைத்துக் கொள்ள வேண்டியவையே. ஆனால் தொழுகையில் முகத்தைத் தவிர. அந்நிய ஆண்கள் இருக்கும்போது தொழுகையிலும் அவள் முகத்தை மறைக்க வேண்டும்.

**5.**மலஜலத்திலிருந்து எதுவும் உடலிலோ உடை யிலோ பட்டுவிடாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

**6.** மலஜலம் கழித்த பின்னர் தண்ணீரால் சுத்தம் செய்ய வேண்டும். அல்லது அசுத்தத்தை நீக்க கற்கள், காகிதம் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். மேலும் சுத்தம் செய்யும்போது இடது கையைப் பயன்படுத்த வேண்டும்.